# மெட்ரோவுக்கு, 'கிகா' விருது

சென்னை, மார்ச் 4–

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், திட்டங்களில் புதுமைகளை புகுத்தி, சிறப்பாக செயல்படுத்தியதற்காக, 'கிகா' விருது வழங்கப்பட்டது.

சென்னையில், விமான நிலையத்தில் இருந்து, வண்ணாரப்பேட்டைக்கும்; பரங்கிமலையில் இருந்து, சென்ட்ரலுக்கும் மெட்ரோ ரயில் இயக்கப்பட்டு வருகிறது.

நிலைய சுற்றுப்புறங்களில் பசுமை, சுகாதாரம் உள்ளிட்ட வசதிகள், சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மின் சிக்கனம் நடவடிக்கையிலும், நிர்வாகம் ஈடுபட்டுள்ளது.

இச்செயல்பாட்டை பாராட்டி, டில்லியில், சமீபத்தில் நடந்த, புதுமை விருதுகள் மற்றும் அப்துல்கலாம் மாநாட்டில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு, 'கிகா' விருது வழங்கப்பட்டது.

மாநாட்டில் இவ்விருதை, மத்திய அரசின், நிடி ஆயோக் துணை தலைவர் ராஜிவ்குமார், சென்னை மெட்ரோ ரயில் நிர்வாக இயக்குனர் பங்கஜ்குமார் பன்சாலிடம் வழங்கினார்.

மெட்ரோ ரயில் சுரங்கப்பாதை கட்டுமான பிரிவு, தலைமை பொதுமேலாளர் விஜயகுமார் சிங் உடனிருந்தார்.




'நிடி ஆயோக்' துணை தலைவர் ராஜிவ்குமார், சென்னை மெட்ரோ நிறுவனத்திற்கு, 'கிகா' விருதை, நிர்வாக இயக்குனர், பங்கஜ்குமார் பன்சாலிடம் வழங்கினார். உடன், மெட்ரோ ரயில் சுரங்கப்பாதை கட்டுமான பிரிவு, தலைமை பொதுமேலாளர், விஜயகுமார் சிங்.